ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

ஆறாம் வகுப்பு - அறிவியல் பருவம்-3 தேர்வு-1(அலகு-1)

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. காந்த ஊசிப்பெட்டியைப் பயன்படுத்தி ________ அறிந்து கொள்ளமுடியும்.
   அ. இயக்கத்தை ஆ. கடந்த தொலைவை இ. திசையை ஈ.வேகத்தை

2. காந்தத்தால் ஈர்க்கப்படும் பொருள் __________
   அ. மரக்கட்டை ஆ. அழிப்பான் இ. ஊசி ஈ. காகிதத்துண்டு

3. காந்தங்கள் அதன் காந்தத்தன்மையை இழக்கக்காரணம் __________
   அ. சுத்தப்படுத்துவதால் ஆ. பயன்படுத்தப்படுவதால்
   இ. பாதுகாப்பாக வைத்திருப்பதால் ஈ. சுத்தியால் தட்டுவதால்

4. தங்குதடையின்றி தொங்கவிடப்பட்ட காந்தம் எப்பொழுதுமே _______ திசையில்தான் நிற்கும்.
   அ. வடக்கு-கிழக்கு ஆ. வடக்கு-தெற்கு இ. கிழக்கு-மேற்கு

5. மாலுமி திசைகாட்டும் கருவிகளை முதன்முதலில் செய்து பயன்படுத்தியவர்கள்
   அ. ஐரோப்பியர்கள் ஆ. இந்தியர்கள் இ. சீனர்கள் ஈ. எகிப்தியர்கள்

**II. பொருத்துக**

| | | |
|---|---|---|
| 1. காந்த திசைகாட்டி | - | அதிக காந்த வலிமை |
| 2. ஈர்ப்பு | - | ஒத்த துருவங்கள் |
| 3. விலக்குதல் | - | எதிரெதிர் துருவங்கள் |
| 4. காந்த துருவங்கள் | - | காந்த ஊசி |
| 5. இயற்கைக் காந்தம் | - | மேக்னடைட் |

**III. சரியா? தவறா என எழுதுக.**

1. இரப்பர் ஒரு காந்தப் பொருள்
2. உருளை வடிவ காந்தத்திற்கு ஒரே ஒரு துருவம் மட்டுமே உண்டு.
3. காந்தத்தின் ஒத்த துருவங்கள் ஒன்றையொன்று விலக்கும்.
4. காந்த ஊசியினைப் பயன்படுத்தி கிழக்கு மற்றும் மேற்கு திசைகளைக் கண்டறிய முடியும்.
5. காந்தத்தினை இரும்புத்துகள்களுக்கு அருகே கொண்டு செல்லும்போது அதிக அளவிலான துகள்கள் காந்தத்தின் மையப்பகுதியில் ஒட்டிக்கொள்கின்றன.

LIVEWORKSHEETS

IV. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. ஒரு காந்தத்திற்கு எப்பொழுதும் ____________ துருவங்கள் இருக்கும்.

2. செயற்கைக்காந்தங்கள் ____________________, லாடக்காந்தம் மற்றும் வளையகாந்தம் ஆகிய வடிவங்களில் தயாரிக்கப்படுகின்றன.

3. காகிதம் __________________________ பொருளல்ல.

4. காந்தத்தால் ஈர்க்கப்படும் பொருள்கள் _____________ தன்மையுள்ள பொருள்கள் எனப்படுகின்றன.

5. பழங்கால மாலுமிகள், திசையைக் கண்டறிய தங்கள் கப்பல்களில் ஒரு சிறிய _____________________ கட்டித் தொங்க விட்டிருந்தனர்.

விடைகள்

காந்தக்கல் காந்தத் காந்தத்தன்மையுள்ள

சட்டக்காந்தம் இரண்டு

LIVEWORKSHEETS